DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
**IN THE COURT OF FAST TRACK MAHILA COURT**
**NAGAPATTINAM.**

**Special Sessions Case No. : 01**/2018

Deposition of Witness for Prosecution : PW- 1

| | | | |
|---|---|---|---|
| Name | : செந்தாமரை | Village | : |
| Father's Name | : | Taluk | : |
| Age | : | Religion | : |
| Calling | : | Caste | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 01.11.2019.

**முதல் விசாரணை**

நான் வடபாதி தெரு, நெய்தவாசல் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு ஒரே மகள் பெயர் அபிநிஷியா. என் மகள் பிறந்த தேதி 27.04.2002. அதற்கான பிறப்பு சான்று உண்மை நகல் அ.சா.ஆ 1 ஆகும். பள்ளி மாற்று சான்றிதழ் நகல் அ.சா.ஆ2 ஆகும். பள்ளியில் சேர்க்கும்போது பிறந்த தேதி பற்றிய தகவலை நான் தான் கொடுத்தேன். என் மகள் 11ம் வகுப்பு வரை தான் படித்துள்ளார். தற்போது என் மகள் வீட்டில் தான் இருக்கிறாள். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு 10ம் வகுப்பிலிருந்து மாறி 11ம் வகுப்பு படித்துகொண்டிருந்தார். அப்போது என் மகள் மாதவிடாய் வராமல் இருந்தார். நான் உடனே செம்பனார் கோவில் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று காண்பித்தேன். அதற்கு மருத்துவர் தெம்பு இல்லை என்று கூறி சத்துமாத்திரை கொடுத்தார். அதன் பிறகு என் மகளுக்கு மாதவிடாய் வராததால் நான் தனியார் மருத்துவமனை செம்பனார் கோவிலுக்கு அழைத்து சென்று காண்பித்தேன். அவர்கள் ஸ்கேன் செய்து பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள். அதன் பிறகு ஸ்கேன் செய்து பார்த்துவிட்டு என் மகள் 7 மாத கர்ப்பமாக இருப்பதாக கூறினார்கள். நான் உடனே என் மகளிடம் இது சம்பந்தமாக விசாரித்தபோது ஆஜர் எதிரிக்கும் தனக்கும் பழக்கம் இருப்பதாகவும், பஸ்சில் செல்லும்போது அதில் நடத்துநரான ஆஜர் எதிரி தன்னை திருமணம் செய்து கொள்கிறேன் என்று சொல்லி பழகியதாகவும், தர்மகுளம் to வானகிரி சாலையில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு பின்புறம் உள்ள

சந்தானபிள்ளைக்கு சொந்தமான காலிஇடத்தில் 2016ம் வருடம் கடைசி மாதம் ஆஜா் எதிரி என் மகளுடன் உடலுறவு கொண்டதாக கூறினாா். அதன் பிறகு என் மகளுடன் பல முறை உடலுறவு வைத்துக்கொண்டதாகவும் கூறினாா். வீட்டில் சொன்னால் உன் பெற்றோரை பஸ் ஏற்றி கொண்றுவிடுவேன் என்று சொல்லி பயமுறுத்தியதால் என் மகள் என்னிடம் இந்த தகவலை மறைத்துவிட்டதாக கூறினாா். அதன் பிறகு பூம்புகாா் காவல் நிலையம் சென்று நான் புகாா் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாா் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகாா் அ.சா.ஆ3 ஆகும். அதன் பிறகு எனது மகளை சீா்காழி அரசு மருத்துவமனைக்கு மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து சென்றாா்கள். அதன் பிறகு நாகப்பட்டினம் குற்றவியல் நீதித்துறை நடுவா் எண்-1 அவா்களிடம் 164(5) கு.வி.மு.சா வாக்குமூலம் பதிவு செய்ய அழைத்து சென்றாா்கள். வழக்கு சம்பந்தமாக போலீசாா் என்னை விசாாித்தாா்கள்.

**எதிாி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிாி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய மனுதாக்கல் செய்யப்பட்டு வேறு வாய்தா கேட்கப்பட்டது. ஆனால் மேற்சொன்ன மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் ஆஜர் எதிரியை தெரியும் என்றும், ஆஜர் எதிரியுடன் என் மகளுக்கு பழக்கம் இருப்பதாகவும், அந்த பழக்கத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரி என் மகளுடன் அவருடைய விருப்பம் இல்லாமல் வலுக்கட்டாயமாக பலமுறை உடலுறவு கொண்டதாகவும், அதன் விளைவாக என் மகள் 4 மாத கர்ப்பமாக இருப்பதாகவும் கூறிவிட்டு ஆஜர் எதிரியுடன் சமாதானமாகி தற்போது உண்மைக்கு புறம்பாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சொன்னேன் என்றால் சரிதான்.